# 18

# அல்குர்ஆனை ஓதுவோம் (ஸூறா - 1)



## ஸூறதுல் பீல்

ஸூறதுல்பீல் 05 வசனங்களைக் கொண்ட மக்காவில் இறக்கப்பட்ட மக்கீ ஸூறாவாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்தபோது ஏற்பட்ட மிக முக்கியமான சம்பவத்தை நினைவுகூரும் வகையில் இந்த ஸூறா அமைந்துள்ளது.

மன்னன் ஆப்றஹா கஃபாவின் மீது பொறாமை கொண்டான். மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து அதனை தரிசிப்பதை விரும்பவில்லை. எனவே கஃபாவை விட அழகான வணக்கஸ்தலம் ஒன்றை நிர்மாணித்தான். அதற்கு மக்களை வரவழைப்பதற்கு பல வழிகளிலும் முயற்சி செய்தான். எனினும் மக்கள் யாரும் அங்கு செல்லவில்லை. எனவே, இறுதியாக கஃபாவை

தகர்த்து அழித்துவிடுவதற்குத் திட்டமிட்டான். அதற்காக சக்தி வாய்ந்த யானைப் படை ஒன்றைத் தயார் செய்து கஃபாவை அழிப்பதற்கு மக்காவிற்கு அனுப்பி வைத்தான்.

எனினும், அல்லாஹ் தனது மாளிகையை தகர்க்க வந்த ஆப்ரஹாவின் யானைப் படையை 'அபாபீல்' எனும் சிறிய பறவைக் கூட்டத்தைக் கொண்டு அழித்துவிட்டான். இப் பறவைகள் சிறிய கற்களை யானைப்படை மீது எறிந்தன. அதனால் யானைப் படை உருக்குலைந்து செத்து மடிந்தன.

அல்லாஹ், ஆப்றஹாவையும் அவனது முழு யானைப் படையையும் அழித்துவிட்டான். இவை அல்லாஹ்வின் சக்தியையும் வல்லமையையும் கஃபாவின் மகிமையையும் உணர்த்துகின்றன. பீல் என்பதன் கருத்து யானை என்பதாகும். இதனாலேயே நபியவர்கள் பிறந்த வருடம் யானை வருடம் (ஆமுல் பீல்) என அழைக்கப்படுகின்றது.

### ஸூறாவும் அதன் பொருளும்


سورة الفيل مكية وهي خمس آيات
بسم الله الرحمن الرحيم
ألم تر كيف فعل ربك بأصحاب الفيل ١ ألم يجعل
كيدهم في تضليل ٢ وأرسل عليهم طيرا أبابيل ٣
ترميهم بحجارة من سجيل ٤ فجعلهم كعصف مأكول ٥

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஓதுகின்றேன்.

1. (நபியே அப்ரஹாவின்) யானைப் படையினரை உமதிறைவன் எவ்வாறு (அழியச்) செய்தான் என்பதனை நீர் (நினைத்துப் பார்க்கவில்லையா?

2. அவர்களுடைய சூழ்ச்சியை அவன் வீணாக்கவில்லையா?

3. அவர்கள் மீது அபாபீல் பட்சிகளைக் கூட்டம் கூட்டமாக அவன் அனுப்பி வைத்தான்.

4. (கெட்டியான) சுடப்பட்ட சிறிய கற்களை அவை அவர்கள் மீது எறிந்தன.

5. அதனால், அவன் அவர்களைப் பறவைகளால் கொத்தித் தின்னப்பட்ட கதிர்களைப் போல ஆக்கி (அழித்துவிட்டான்).

**பயிற்சி**

1. மக்காவில் இறக்கப்பட்ட ஸூறாக்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

2. யானை வருடத்தை அரபியில் எவ்வாறு அழைப்பர்?

3. யானைப்படையை அழித்த பறவைக்கூட்டத்தின் பெயர் என்ன?

4. அல்லாஹ், யானைப் படையிடமிருந்து கஃபாவைக் காப்பாற்றிய முறையை சுருக்கமாக விபரிக்குக.

5. ஸூறதுல் பீலையும், அதன் பொருளையும் மனனமிடுக.